18.03.2026

OS No: 559/2019

பி.வா.சா. 1 திரு. காசித/பெராமையா

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

______ எனது நிரூபண வாக்குமூலத்திற்கான விபரங்கள் எனது வழக்கறிஞருக்கு நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். 2015 ஆம் வருடம் வழக்கறிஞர் முத்துராமன் மூலமாக தாவா வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளதில் அதற்கான விபரமும் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். 2025 ஆம் வருடம் வழக்கறிஞர் சந்திரசேகரன் மூலமாக தாவா வழக்கில் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளதில் அதற்கான விபரமும் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கான அறக்கட்டளை பத்திரத்தினை தற்போது வரை எத்தனை முறை திருத்தி உள்ளோம் 3 முறை திருத்தி உள்ளோம். அவ்வாறு அறக்கட்டளை பத்திரத்தினை திருத்தம் செய்திட அறக்கட்டளை உறுப்பினர்களின் சம்மதம் பெற வேண்டும் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளை பத்திரத்தினை திருத்தம் செய்தது குறித்து உறுப்பினர்கள் ஆட்சேபனை செய்து மனு எதுவும் உரிய அலுவலரிடம் கொடுத்துள்ளார்களா என்றால் கார்த்திகேயனை அறக்கட்டளையில் சேர்த்தது குறித்தும் அதன் பிறகு பார்த்திபனை அறக்கட்டளையில் சேர்த்தது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் சம்பந்தமாக சிவகங்கை சார்பதிவாளர் அவர்களிடம் ஆட்சேபனை மனு கொடுத்து விசாரணை நிலுவையில் உள்ளது. நாங்கள் சார்பதிவாளர் அலுவலரிடம் கொடுத்த மனுவினையோ , அறிவிப்பினையோ தாவா வழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஆசிரியராக இருந்து பணி ஓய்வு பெற்ற பிறகு தான் சாம்பவிகா கல்வி அறக்கட்டளை ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். சாம்பவிகா பள்ளியில் முதலில் 11, 12 ஆம் வகுப்புகளும் அதன் பிறகு 6 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும் அதன் பிறகு நர்சரி முதல் 5 ஆம் வகுப்பு வரையிலும் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்தது என்றால் சரிதான். தாவா பள்ளிக்கூடம் சம்பந்தமாக நிலத்தினை நான் கிரையம் வாங்கி அறக்கட்டளைக்கு கொடுத்ததாக

சொல்வதில் மேற்படி கிரைய பத்திரத்தினையோ அறக்கட்டளைக்கு கொடுத்த பத்திரத்தினையோ ஆவணமாக தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் ஆவணங்கள் பள்ளிக் கூடத்தில் உள்ளது சான்று நகல்களை ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. பள்ளி ஆரம்பித்த போது எத்தனை கட்டிடங்கள் நான் கட்டினேன் என்றால் 1999 ஆம் வருடம் ஒரு கான்கிரீட் கட்டிடமும் 2005 ஆம் வருடம் கான்கிரீட் கட்டிடமும் கட்டினேன் அது போக 2 ஓட்டு கட்டிடங்கள் இருந்தன. 2005 ஆம் வருடம்கட்டிடம் கட்டிய போது வங்கியில் கடன் வாங்கி எங்களது சொந்த பணம் கொண்டும் கட்டினோம். 1999 ஆம் வருடம் முதல் 2005 ஆம் வருடம் வரை மேற்படி சாம்பவிகா பள்ளிக்கு எத்தனை பஸ் மற்றும் வேன்கள் இருந்தன என்றால் 2 பஸ் இருந்த விபரம் தெரியும் எத்தனை வேன்கள் என்று தெரியாது சுமாராக 10 வேன்கள் இருக்கும். 2012 ஆம் வருடத்திற்கு பிறகு சாம்பவிகா பள்ளியில் எத்தனை தார்சு கட்டிடங்கள் கட்டப்பட்டன என்றால் 2012 ஆம் வருடத்திற்கு பிறகு நான் பள்ளி கூடத்திற்கு செல்லவில்லை என்பதால் எத்தனை தார்சு கட்டிங்கள் கட்டப்பட்டன என்ற விபரம் எனக்கு தெரியாது. எந்த வருடம் சாம்பவிகா பள்ளியின் செயலாளர் பொறுப்பில் இருந்து வெளியேறி வந்தேன் என்றால் 23.08.2012 ஆம் தேதி வெளியேறி வந்தேன். 2012 ஆம் வருடம் நான் மேற்படி பள்ளியில் இருந்து வெளியேறும் சமயம் எத்தனை தார்சு கட்டிடங்கள் கட்டப்பட்டது என்றால் 2 தார்சு கட்டிடங்கள் கட்டப்பட்டு இருந்தன ஒரு கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று கொண்டிருந்தது. 1999 ஆம் வருடம் பள்ளி ஆரம்பிக்கப்பட்ட போது எத்தனை மாணவர்கள் இருந்தார்கள் 2012 ஆம் வருடம் எத்தனை மாணவர்கள் இருந்தார்கள் என்றால் 1999 ஆம் வருடம் பள்ளி ஆரம்பிக்கப்பட்ட போது 32 மாணவர்களும் 2012 ஆம் வருடம் சுமார் 3000 மாணவர்களும் இருந்தார்கள். 1999 முதல் 2012 வரை மாணவர்களிடம் கல்வி கட்டணமானது ரொக்கமாக தான் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பணமானது வங்கியில் செலுத்தப்பட்டது. 1999 ஆம் வருடம் முதல் 2012 ஆம் வருடம் வரை மாணவர்களிடம் வசூல் செய்யப்பட்ட கல்வி கட்டணம் குறித்து வருமான வரி கணக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் 2010 ஆம் வருடம் வரை வருமான

வரி கணக்கு செலுத்தும் அளவுக்கு கல்விக்கட்டணம் வசூல் ஆகவில்லை. 2011 மற்றும் 2012 ஆம் வருடங்களுக்கு வசூல் செய்யப்பட்ட கல்வி கட்டணம் குறித்து வருமான வரி செலுத்தப்பட்டதா என்றால் நியாபகம் இல்லை. 2010 ஆம் வருடம் வரை சுமாராக மாணவர்களிடம் இருந்து எவ்வளவு கல்வி கட்டணம் வருடம் தோறும் வசூல் செய்யப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. 1999-2012 ஆம் வருடம் வரை மாணவர்களின் கல்வி கட்டணமாக பல கோடி ரூபாய் வசூல் ஆனது என்றும் அது குறித்து வருமான வரி கணக்கு செலுத்திடாமல் நானும் எனது மகன் மாறனும் மேற்படி தொகையினை எடுத்துகொண்டோம் என்றால் உண்மையில்லை. 2012 வருடம் முதல் தற்போது வரை ஏ.எம். சேகர் முறையாக வருமான வரி செலுத்தி வரும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1999-2012 ஆம் வருடம் வரை வசூல் ஆன கல்வி கட்டணம் குறித்து வரவு செலவு விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்பட்டு வந்தனவா என்றால் முறையாக பராமரிக்கப்பட்டு வந்தன அந்த ஆவணங்கள் அனைத்தும் பள்ளி கூடத்தில் தான் உள்ளது. பள்ளிக் கூடத்தில் உள்ளதாக சொல்லும் மேற்படி வரவு செலவு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவேண்டும் என்பதாக ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் இல்லை இனிமேல் தான் எடுக்க வேண்டும். 2009 ஆம் வருடத்திற்கு பிறகு நீதியரசர் ரவிராஜ பாண்டியன் அறிக்கையின் அடிப்படையில் சாம்பவிகா பள்ளியில் மாணவர்களிடம் கல்வி கட்டணம் வசூல் செய்யப்படுகிறது என்றால் சரிதான். 1999 – 2012 வரையிலான கால கட்டத்தில் அறக்கட்டளை பத்திரத்தில் என்ன சொல்லப்பட்டுள்ளதோ அதன் அடிப்படையிலேயே சாம்பவிகா பள்ளியில் நிர்வாக நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்றால் சரிதான். 2012 க்கு பிறகு சாம்பவிகா பள்ளியில் என்ன நிர்வாக நடவடிக்கைகள் கடைபிடிக்கப்படுகிறது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2006 ஆம் வருடம் எனது ஒரு மகன் பாரதி தாசன் மகள் ராணி மருமகன் சேகர் ஆகியோர் அறக்கட்டளையில் உறுப்பினர்களாக சேர்ந்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன 3 நபர்களும் 2006 ஆம் வருடம் அறக்கட்டளையில் இருந்து வெளியே சென்ற 3 உறுப்பினர்களை தவிர மற்ற 3 உறுப்பினர்களான நான் , மலர்வேணி மற்றும் பாலமுருகன் ஆகியோர் சேர்ந்து

கூட்டம் கூடி தீர்மானம் இயற்றி அதன் அடிப்படையில் சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி அறக்கட்டளையில் இருந்து வெளியேறிய 3 நபர்களுக்கான பங்கு தொகையை புதியதாக வந்த சேகர் மற்றும் ராணி மற்றும் பாலமுருகன் ஆகியோர் கொடுத்ததால் தான் அவர்கள் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான் மூவரும் தலா 8 லட்சம் என்ற அடிப்படையில் மொத்தம் 24 லட்சம் கொடுத்தார்கள். 2006 ஆம் வருடம் முதல் தற்போது வரை எனது மகன் பாரதி தாசன் வெளிநாட்டில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். 2012 ஆம் வருடம் சேகர் , ராணி ஆகியோர் அறக்கட்டளை மற்றும் பள்ளியின் பொறுப்புகளுக்கு அறக்கட்டளை உறுப்பினர்களின் ஒப்புதலோடு வந்தார்களா என்றால் நானும் எனது மகன் பாரதி தாசனும் இல்லாமல் மற்ற உறுப்பினர்களின் ஒப்புதலோடு பொறுப்பிற்கு வந்தார்கள். சேகர் மற்றும் ராணி ஆகியோர் மேற்படி பொறுப்பிற்கு என்னுடைய மற்றும் எனது மகன் பாரதிதாசன் ஒப்புதலின்றி வந்தது குறித்து சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. பாலமுருகன் 2003 ஆம் வருடம் அரசு பணிக்கு சென்று விட்டார் என்றால் சரிதான். சில மாதங்களுக்கு முன்பு அரசு பணியில் இருந்து பாலமுருகன் ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். 2012 முதல் தற்போது வரை பாலமுருகனும் , மலர்வேணியும் அறக்கட்டளைக்கு சென்றார்களா என்றால் எனக்கு தெரியாது. மலர்வேணி கடந்த பல வருடங்களாக நோய்வாய் பட்டு வீட்டில் இருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது சாட்சியத்திற்கு பிறகு பாலமுருகனையோ , மலர்வேணியையோ சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. எதிர்வழக்குரை , கூடுதல் எதிர்வழக்குரை ஆகியவற்றில் சொல்லாத சங்கதிகளை நிரூபண வாக்குமூலம் பாரா 8 முதல் பாரா 20 வரை சொல்லியுள்ளேன் என்றும் அது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிவாசா ஆ 1 ஆவணமானது அறக்கட்டளை கூட்டத்தினை சேகர் கூட்டவில்லை என்பதற்காகவோ வரவு செலவுகளை ஒப்படைக்கவில்லை என்பதற்காகவோ போடப்பட்டது அல்ல என்றால் சரிதான். அறக்கட்டளையின் வங்கி கணக்குகளை close செய்துவிட்டு வெவ்வேறு வங்கி கணக்குகளை தொடங்கி பண மோசடி செய்ததற்காக சேகர் மீது கொடுக்கப்பட்டது. எனது கூடுதல் எதிர் வழக்குரையில்

பிவாசா ஆ 1 ஆவணம் குறித்து சங்கதி சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. பிவாசா ஆ 1 ஆவணமானது எனக்கும் சேகருக்கும் உள்ள பிரச்சினை காரணமாக சேகரின் நற்பெயரை கெடுப்பதற்காக கொடுக்கப்பட்டது என்றால் தவறு. பிவாசா ஆ 1 ஆவணத்தின் படியான வழக்கு Mistake of Fact என முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான் அதன் பேரில் தனி புகார் கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி Mistake of Fact என முடித்து வைக்கப்பட்ட வழக்கு குறித்து தனியாக ஆட்சேபனை மனு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. தனிப்புகார் மனுவில் சேகர் , ராணியை தவிர வங்கி மேலாளர்களையும் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். தனிப்புகார் மனுவினை தடை செய்து Stay உத்தரவு எதுவும் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தனிப்புகார் மனு குறித்து எதிர்வழக்குரையிலும், கூடுதல் எதிர் வழக்குரையிலும் சங்கதி சொல்லவில்லை என்றால் சரிதான். பிவாசா ஆ 3 ஆவணம் எதற்கான தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மேற்படி பிவாசா ஆ 3 ஆவணம் வங்கி கணக்கு புத்தகத்தில் வரவு செலவு உள்ள தேதிகளில் மேற்படி வரவு செலவு மேற்கொள்ளவில்லை என சொன்னது உண்மை அல்ல என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தனிப்புகார் மனுவிற்கு ஆதரவாக பிவாசா ஆ 3 ஆவணம் எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் தவறு. OS No 559/2019 மற்றும் OS No 68/2013 ஆகிய இரு வழக்குகளும் அறக்கட்டளை கூட்டம் நடத்துவது சம்பந்தமாகவும் அறக்கட்டளை வரவு செலவு சம்பந்தமான கணக்கு வழக்கு விபரங்களையும் அறிய தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அறக்கட்டளையின் வரவு செலவு பதிவேடுகள் சாம்பவிகா பள்ளியின் உள்ளது என்பது தான் OS No 559/2019 ல் எங்களுடைய எதிர் வாதம் என்றால் சரிதான். 2013 ஆம் வருடம் நான் அசல் வழக்கு எண் 68/2013 ஐ தாக்கல் செய்த பிறகு தான் சேகர் அசல் வழக்கு எண் 559/2019 ஐ தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அறக்கட்டளையின் வரவு செலவு பதிவேடுகள் சாம்பவிகா பள்ளியின் உள்ளது என OS No 68/2013 பிராதில் குறிப்பிட்டுள்ளேன்என்றால் சரிதான். OS No 559/2019 பிராதில் கண்ட ஏ.எம். சேகர் என்ற கையெழுத்து மேற்படி சேகருடையது

தான் என்றால் சரிதான். பிவாசா ஆ 4 ல் மேற்படி OS No 559/2019 ல் கண்ட ஏ.எம். சேகரின் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை மேற்படி பிவாசா ஆ 4 கடிதம் ஏ.எம். சேகர் எழுதியது. பிவாசா ஆ 4 கடிதம் எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 2005 ஆம் வருடம் ஏற்பட்டது. பிவாசா ஆ 4 ஆவணத்தில் சாம்பவிகா பள்ளி குறித்தோ அறக்கட்டளை வரவு செலவு குறித்தோ விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிவாசா ஆ 4 கடிதம் ஏ. எம். சேகரால் எனக்கு அனுப்பட்ட கடிதம் அல்ல என்றால் சரியல்ல. பிவாசா ஆ 5 ல் மேற்படி OS No 559/2019 ல் கண்ட ஏ.எம். சேகரின் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை. பிவாசா ஆ 5 ஆவணத்தில் சாம்பவிகா பள்ளி குறித்தோ அறக்கட்டளை வரவு செலவு குறித்தோ விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிவாசா ஆ 5 வழக்கிற்காக தங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிவாசா ஆ 5 கடிதத்திற்கான அஞ்சல் உறை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிவாசா ஆ 6 கடிதத்தினை ராணி யாரிடம் கொடுக்க சொன்னார் என்றால் உறவினர் மூலமாக எனது மகன் மாறனிடம் கொடுக்க சொன்னார். பிவாசா ஆ 6 கடிதத்தில் ராணியின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். பிவாசா ஆ 6 ஆவணம் வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டடது என்றால் சரியல்ல. பிவாசா ஆ 6 ஆவணத்தில் சாம்பவிகா பள்ளி குறித்தோ அறக்கட்டளை வரவு செலவு குறித்தோ விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிவாசா ஆ 7 முதல் 23 வரையிலான வில்லங்க சான்று நடவடிக்கைகள் நான் சாம்பவிகா பள்ளியின் செயலாளர் பதவியிலிருந்து வெளியேறி வந்த பிறகு OS No 68/2013 வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு ஏற்பட்டது என்றால் சரிதான். பிவாசா ஆ 7 முதல் 23 வில்லங்க சான்று ஆன்லைன் மூலமாக எடுக்கப்பட்டவை என்றால் சரிதான். மேற்சொன்ன வில்லங்க சான்றுகளில் கண்ட நபர்களின் பெயர்கள் மட்டுமே உள்ளது என்றும் அவர்களின் முகவரிகள் இல்லை என்றால் சரிதான். மேற்படி வில்லங்க சான்றுகளில் கண்ட ஆவணங்களை பார்த்தால் மட்டுமே அதில் உள்ள நபர்களின் முழு விபரமும் தெரிய வரும் என்றால் சரிதான். பிவாசா ஆ 7 – பிவாசா ஆ 23 ல் கண்ட ஆவணங்கள் சாம்பவிகா பள்ளிக்கோ அல்லது அறக்கட்டளைக்கோ தொடர்புடைய ஆவணம் அல்ல என்றால் சரிதான்.

பிவாசா ஆ 7 – பிவாசா ஆ 23 ஆவணங்களில் உள்ள சொத்துக்களை சேகர் , ராணி மற்றும் பார்த்திபன் , கார்த்திகேயன் ஆகியோர் எந்த பணத்தினை கொண்டு வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாம்பவிகா பள்ளிக்கு வருவதற்கு முன் ஏ .எம்.சேகர் வெளிநாட்டில் அதிகமாக சம்பாதித்திவர் என்றால் சரியல்ல. ஏ எம் சேகர் , ராணி , எம்.எஸ் . பார்த்திபன் , எம்.எஸ். கார்த்திகேயன் ஆகியோர் தாங்கள் ஈட்டும் வருவாய்க்கு கடந்த 10 வருடமாக முறையாக வருமான வரி செலுத்தி வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன 4 நபர்கள் சொத்துக்கள் வாங்குவதற்கு தனிப்பட்ட வருமானம் உள்ளது என்றும் அறக்கட்டளையின் பணத்தினையோ பள்ளியின் பணத்தினையோ கொண்டு சொத்துக்கள் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் தவறு. ஏ.எம்.சேகர் அறக்கட்டளையின் பள்ளியின் பணத்தினையும் கையாடல் செய்ததாக நான் மட்டும் புகார் கொடுத்தேனா அல்லது அறக்கட்டளையின் உறுப்பினர்கள் சேர்ந்து புகார் கொடுத்தோமா என்றால் நான் மட்டும் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின் பேரில் ஏ.எம். சேகர் குற்றவாளி என நீதிமன்றம் முடிவு செய்திடவில்லை என்றால் வழக்கு நிலுவையில் உள்ளது. நான் குறிப்பிடும் குற்ற செயல் எதையும் ஏ.எம். சேகர் செய்யவில்லை என்றும் அவர் மீது உள்ள தனிப்பட்ட வெறுப்பின் காரணமாக மேற்படி புகார் கொடுத்துள்ளேன் என்றால் தவறு. ஏ.எம். சேகர் மற்றும் ராணி மீது என்னை தவிர மற்ற அறக்கட்டளை உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. 2012 முதல் தற்போது வரை ஏ.எம். சேகர் மற்றும் ராணி மீது என்னை தவிர மற்ற அறக்கட்டளை உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்திவில்லை மேற்படி வபிரம் எனக்கு தெரியும் என்றும் அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எம்.எஸ். கார்த்திகேயன் , எம் . எஸ் பார்த்திபன் ஆகியோரை அறக்கட்டளையின் உறுபபினராக சேர்த்த பின் பத்திர பதிவு துறையில் நான் கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் எம். எஸ் கார்த்திகேயனுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ளது. எம். எஸ். கார்த்திகேயனுக்கு எதிராக உத்தரவு எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1999

ஆம் வருடத்தில் இருந்து தற்போது வரை அறக்கட்டளையின் 2 மாதத்திற்கு ஒருமுறையான கூட்டம் ராகினிப்பட்டியில் சாம்பவிகா பள்ளியில் நடைபெறும் என்றால் 2007 வரை கூட்ட ம் நடைபெற்றது சேகரும் , ராணியும் உறுப்பினராக சேர்ந்த பிறகு 2012 வரை நடைபெற்ற கூட்டத்திற்கு மேற்படி நபர்கள் கலந்து கொள்ளவில்லை 2012 க்கு பிறகு அறக்கட்டளையின் உறுப்பினர் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. மேற்கண்ட கூட்டம் முடிவிற்கு பின்பு கூட்டத்திற்கு வந்த உறுப்பினர்களிடம் அதற்கான பதிவேடுகளில் கையெழுத்து பெறப்படும் என்றால் சரிதான். அறக்கட்டளையின் கூட்டத்திற்கு தீர்மானங்கள் நிகழ்த்தப்படும் என்றால் சரிதான். மேற்படி தீர்மானம் குறித்து அறக்கட்டளைக்கு வந்த உறுப்பினர்களிடம் அதற்கான பதிவேடுகளில் கையெழுத்து பெறப்படும் என்றால் சரிதான். 2006 முதல் 2012 வரையிலான அறக்கட்டளையின் கூட்டங்களில் எத்தனை கூட்டங்களில் எனது மகன் பாரதிதாசன் கலந்து கொண்டார் என்றால் 5, 6 கூட்டங்களில் கலந்து கொண்டார் சரியாக நியாபகம் இல்லை. பாரதிதாசன் கூட்டத்தில் கலந்து கொண்ட நாளில் உறுப்பினர் வருகை பதிவேட்டிலும் தீர்மான நோட்டிலும் பாரதிதாசன் கையெழுத்து செய்துள்ளாரா என்றால் கையெழுத்து செய்துள்ளார். சாம்பவிகா பள்ளிகூடத்திற்குவெளியே அறக்கட்டளையின் கூட்டம் எந்த வருடம் எங்கு நடைபெற்றது என்றால் 2015 ஆம் வருடம் திருப்பத்தூர் ரோட்டில் உள்ள டிவிஎஸ் ஷோ ரூம் அருகே நடைபெற்றது. மேற்படி பள்ளிக்கு வெளியே வேறு எங்கு கூட்டம் நடைபெற்றது என்றால் 2014 ஆம் வருடத்தில் நடைபெற்றது எந்த இடம் என்று நியாபகம் இல்லை. மேற்படி 2 கூட்டங்களை தவிர தற்போது வரை வெளி பகுதிகளில் அறக்கட்டளையின் கூட்டம் நடைபெற்றுள்ளதா என்றால் கூட்டமே நடைபெறவில்லை. 2012 முதல் தற்போது வரை சாம்பவிகா பள்ளியில் அறக்கட்டளை கூட்டம் 2 மாத்திற்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது என்றும் நானும், மலர்வேணி, பாலமுருகன் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 2014 , 2015 ல் சாம்பவிகா பள்ளிக்கு வெளியே நடைபெற்ற அறக்கட்டளை கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் யார் என்றால் நானும், மலர்வேணி, பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டோம். 2014, 2015 ல் நடைபெற்ற மேற்சொன்ன 2 கூட்டங்களில்

அழைப்பிதழ்கள் முறையான அஞ்சல் துறை மூலமாக அனுப்பப்பட்டது என காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடும் மேற்சொன்ன 2 கூட்டங்கள் சட்ட விரோதமானது என்றால் சரியல்ல. அறக்கட்டளையின் பத்திரப்படி அறக்கட்டளையின் கூட்டமானது ராகினிப்பட்டியில் உள்ள சாம்பவிகா பள்ளியில் 2 மாதத்திற்கு ஒருமுறை கூட்ட வேண்டும் என்றால் சரிதான். 1999 முதல் 2012 வரையிலான சாம்பவிகா அறக்கட்டளையின் பொறுப்பை நான் நிர்வாகம் செய்து வந்த காரணத்தினால் அந்த காலகட்டத்திற்கு உரிய வரவு செலவு விபரங்களை தாக்கல் செய்ய வேண்டி கடமை உள்ளது என்றால் மேற்படி காலகட்டங்களில் வருடாவருடம் வரவு செலவு கணக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன். 2012 க்கு பிறகு சேகர் வகையறா வரவு செலவு கணக்கினை தாக்கல் செய்யவில்லை. 2012 – 2013 ஆம் வருடத்தில் ஏ.எம். சேகர் அறக்கட்டளையின் வரவு செலவு கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் நியாபகம் இல்லை நான் தான் வரவு செலவு கோரி ஏ.எம். சேகருக்கு அறிவிப்பு அனுப்பினேன். வாசாஆ 2 வழக்கறிஞர் அறிவிப்பை ஏ.எம். சேகர் எனக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான் அதற்கு பதில் அறிவிப்பு நான் அனுப்பியுள்ளேன். வாசா ஆ 2 ஆவணம் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகும் நான் அறக்கட்டளையின் வரவு செலவு குறித்த விபரங்களை கொடுக்கவில்லை என்றால் தவறு. நான் அனுப்பியதாக சொல்லும் பதில் அறிவிப்பை தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் பதில் அறிவிப்பு அனுப்பினேனா இல்லையா என எனக்கு நியாபகம் இல்லை. வாசா ஆ 5 ஆவணம் முதல் வாசா ஆ 17 ஆவணம் வரையிலான ஆவணங்கள் குறித்த விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. மேற்சொன்ன ஆவணங்கள் விபரம் எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்கான தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. வாதிகள் கோரி பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்க தக்கது என்றும் நான் வீணாக எதிர் வாதம் செய்கிறேன் என்றும் சொன்னால் தவறு.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.03.18 16:57:25 +0530